


தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.8.2023) தலைமைச் செயலகத்தில், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககம், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை ஆகியவற்றில் பணிபுரிந்து பணிக் காலத்தில் உயிரிழந்த 43 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் பணியிடத்திற்கான பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 6 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆணையர் திருமதி மைதிலி கே.ராஜேந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

‘சென்னை நாளில்’ – மூன்று சிறப்பான நூல்கள் வெளியீடு!

# ‘தி இந்து’ குழுமத்துக்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு!

## திராவிட மைய நிலத்தின் மரபைக் கொண்டாடும் முயற்சிக்கு நன்றி!

**சென்னை, ஆக.23–**

**‘சென்னை நாளில்’ – அதன் சிறப்பை எடுத்து விளக்கும் வகையில் மூன்று சிறப்பான நூல்கள் வெளியிட்ட ‘தி இந்து’ குழுமத்தைப் பாராட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சமூக வலைதளப் பதிவிட்டுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின், அந்த சமூக வலைதளப் பதிவு வருமாறு :

சென்னை நாளில் ‘தி இந்து’ குழுமத்தின் மூன்று சிறப்பான நூல்களை வெளியிட்டதில் பெருமையடைகிறேன்.

‘Epic Saga of the Cholas’ நூல் சோழப் பேரரசின் பிரம்மாண்டத்தையும், ‘Tamil Nadu In Focus’ தொகுப்பானது தமிழ்நாட்டின் வரலாறு மற்றும் பண்பாடு குறித்த பல நூறாண்டு கால ஆர்வமூட்டும் பார்வைகளையும் வழங்குகிறது.

‘Pioneers – Stars in the Madras Galaxy’ நூல் நமது மண்ணைச் சேர்ந்த தளர்வுறாத சாதனையாளர்களைப் பெருமைப்படுத்துகிறது.

திராவிட மையநிலத்தின் மரபையும் நாயகர்களையும் கொண்டாடும் இம்முயற்சிக்காக என்.ராம், என்.ரவி, என்.முரளி உள்ளிட்ட ‘தி இந்து’ குழுமத்தைச் சேர்ந்த அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாட்டிற்குச் சென்று பணியாற்றிய போது இறந்த - குறைந்த வருவாய்ப் பிரிவைச் சேர்ந்த

# தமிழர்கள் குடும்பத்து வாரிசுகளுக்கு - திருமண, கல்வி உதவித் தொகை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஆக.23-

வெளிநாட்டிற்குச் சென்று பணியாற்றி பணியின்போது இறந்த குறைந்த வருவாய்ப் பிரிவைச் சேர்ந்த தமிழர்கள் குடும்பத்திலுள்ள அவர்தம் மகன், மகளுக்கு திருமண உதவித் தொகையாக 20 ஆயிரம் ரூபாய் மற்றும் கல்வி உதவித் தொகையாக 12 ஆயிரம் ரூபாயும் வழங்கிட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அதன் விபரம் வருமாறு :

தமிழர்கள் எங்கு வாழ்ந்தாலும், அவர்களுக்கு தமிழ்நாடுதான் தாய் வீடு. அவர்கள் மீது அன்பு செலுத்துவது மட்டுமல்ல, அரவணைப்பதும், பாதுகாப்பதும் தாய்த் தமிழ்நாட்டின் கடமையாகும்.

இப்படி பல்வேறு நாடுகளுக்குச் சென்று வாழும் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவும், உதவிகளைச் செய்யவும் தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், குறைந்த வருவாய் பிரிவைச் சேர்ந்த தமிழர்கள் வெளிநாட்டிற்குச் சென்று பணியாற்றி பணியின் போது இறக்க நேரிட்டால் அவர்கள் குடும்பத்திலுள்ள அவர்தம் மகன், மகளுக்கு திருமண உதவித் தொகை மற்றும் கல்வி உதவித் தொகை வழங்கப்படும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஏற்கனவே அறிவித்திருந்தார்கள்.

இந்த அறிவிப்பினைச் செயல்படுத்தும் வகையில், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறையின் சார்பில் அயல்நாடுகளுக்கு பணியின் பொருட்டு சென்று அங்கு பணியின்போது இறந்த குறைந்த வருவாய்ப் பிரிவைச் சேர்ந்த தமிழர்களின் குடும்பத்திலுள்ள மகன், மகளுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்கிடும் வகையிலும், திருமணத்தின் பொருட்டு ஏற்படும் எதிர்பாராத கூடுதல் செலவினத்தால் அக்குடும்பத்தினர் கடனில் சிக்கித் தவிப்பதைத் தடுக்கும் பொருட்டும் அக்குடும்பத்திலுள்ள மகன், மகளுக்கு திருமண உதவித் தொகையாக 20 ஆயிரம் ரூபாய் வழங்கிடவும்; அவர்தம் குடும்பத்திலுள்ள மகன், மகளுக்கு கல்வியில் சிறந்த எதிர்காலத்தினை உருவாக்கிடும் வகையிலும், உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் அவர்களின் விகிதத்தை அதிகரிப்பதற்கும், கல்வியில் அவர்களின் ஆர்வத்தினை அதிகரிப்பதற்கும் அவர்களுக்கு கல்வி உதவித் தொகையாக 12 ஆயிரம் ரூபாய் வழங்கிடவும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

மேற்குறிப்பிட்ட திருமண உதவித் தொகை மற்றும் கல்வி உதவித் தொகை பெற அயலகத் தமிழர் நல வாரியத்தில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

திருமண உதவித் தொகை பெற, திருமணத்தின்போது மணமகனுக்கு 21வயதும், மணமகளுக்கு 18 வயதும் நிறைவடைந்திருக்க வேண்டும்.

பத்தாம் வகுப்பு வரை படித்திருக்க வேண்டும், பழங்குடியினர் 5ஆம் வகுப்பு வரை படித்திருக்க வேண்டும்.

ஒரு குடும்பத்தில் இரண்டு நபர்களுக்கு மட்டும் திருமண உதவித் தொகை வழங்கப்படும்.

கல்வி உதவித் தொகை பெற தமிழ்நாடு அரசின் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று அல்லது அயல்நாடுகளின் அதற்கு இணையான படிப்புகளில் தேர்ச்சி பெற்று 11ஆம் மற்றும் 12ஆம் வகுப்பு சேர்க்கை பெற்ற மாணவர்கள், மருத்துவக் கல்லூரிப் படிப்பு, பொறியியல் படிப்பு, வேளாண்மை பொறியியல் (Agri. / Engg.) மற்றும் டிப்ளமோ படிப்பு, அரசு அங்கீகாரம் பெற்ற கல்லூரிகள் மூலம் தொழிற்கல்வி படிப்புகள், பாலிடெக்னிக்குகள் (Polytechnic)/தொழிற் பயிற்சி நிறுவனங்களில் சேர்க்கை (Admission) பெற்ற மாணவர்கள் மட்டுமே இக்கல்வி உதவித் தொகைக்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள் ஆவார்கள்.

ஒரு குடும்பத்தில் இரண்டு மாணவர்களுக்கு மேல் உதவித் தொகை வழங்கப்பட மாட்டாது. மேற்படி உதவித் தொகைகள் வழங்குவது தொடர்பான விரிவான நடைமுறை அயலகத் தமிழர் நல வாரியத்தால் வகுக்கப்படும்.

இவ்வாறு அரசின் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில், நேற்று (22.08.2023) சென்னை, கிண்டி, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவ பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பொது சுகாதார ஆராய்ச்சி புதிய முயற்சிகள் மற்றும் சிந்தனைகள் (Shifting Landscapes / Innovations in Public Health Research Dissemination Workshop) கருத்தரங்கில், தமிழ்நாடு டாக்டர்.எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம் மற்றும் பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்துத்துறைக்குமான புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டது. இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவ பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் மரு.நாராயணசாமி, பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.தி.சி.செல்வவிநாயகம், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவ பல்கலைக்கழகத்தின் பதிவாளர் மரு.அஸ்வத் நாராயணன், பொது சுகாதாரத் துறை அலுவலர்கள், மருத்துவ பேராசிரியர்கள் மற்றும் செவிலியர்கள் கலந்துகொண்டனர்.

# நீட்: நீதியைக் கேலிக் கூத்தாக்கி - கூட்டாட்சி முறையை அவமதிப்பதா?

இந்தியாவில் நீட் தேர்வு நடைமுறைப்படுத்தப்பட்ட காலம் முதல் தற்போது வரை தமிழகத்திலும் பிற இடங்களிலும் அதனால் நிகழும் தற்கொலைகளும்தொடர்கதையாகிவிட்டது. நீட் தேர்வில் இரு முறை தோல்வியுற்ற விரக்தியில் சமீபத்தில் உயிரை மாய்த்துக்கொண்ட சென்னையை சேர்ந்த 19 வயது மாணவனையும் சேர்த்து, NEET தேர்வினால் தற்கொலை செய்துகொண்ட மாணவர்களின் எண்ணிக்கை 16 ஆக உயர்ந்துள்ளது.

இந்த ஆண்டுக்கான நீட் தேர்வு முடிவுகள் ஜூன் 1 ஆம் தேதி வெளியான நிலையில், நீட் வரலாற்றில் முதல் முறையாக, தமிழ்நாட்டைச் சேர்ந்த பிரபஞ்சன் எனும் மாணவன் 720/720 மதிப்பெண்கள் பெற்று மாநிலத்தில் முதலிடம் பிடித்தார்.

மேலும் தமிழ்நாட்டைச் சேர்ந்த நான்கு மாணவர்கள் அகில இந்திய அளவில் முதல் 10 இடங்களில் இடம்பெற்று சாதனை படைத்தனர். இந்த மாணவர்களின் சாதனை பாராட்டுக்குரியதே ஆயினும், இவர்களின் வெற்றியை வைத்து நீட்தேர்வினை நியாயப்படுத்த முடியாது.

தி.மு.க. அரசும் பிற அரசியல் கட்சிகளும் நீட் தேர்வை எதிர்ப்பதற்கு காரணம் நம் மாணவர்களுக்கு அந்த தேர்வை எதிர்கொள்ளும் திறன் இல்லாததால் அல்ல.. நீட்போன்ற நுழைவுத் தேர்வுகள் சமுதாயத்தில் பின்தங்கிய குடும்பங்களில் இருந்து வரும் மாணவர்களை ஓரம் கட்டிவிடுவதால் தான். உதாரணத்திற்கு, தமிழ்நாட்டில் புகழ்பெற்ற கல்லூரிகளில் ஒன்றான ஐ.ஐ.டி.யில் சேரும் மாணவர்களில் 80 சதவீதத்தினர் சென்னையை சேர்ந்தவர்களாகவும், குறிப்பாக குறிப்பிட்ட பள்ளியை சேர்ந்த மாணவர்களாகவும் இருக்கின்றனர். அதேபோல பிராந்திய பொறியியல் கல்லூரிகள் தேசிய கல்லூரிகளாக மாற்றப்பட்டு 12 ஆம் வகுப்பு மதிப்பெண் அடிப்படையில் இல்லாமல் நுழைவுத்தேர்வு அடிப்படையில் மாணவச் சேர்க்கை நடத்தப்பட்டு வருகிறது. இதனால் திருச்சியில் உள்ள NITஇல் சேரும் கிராமப்புற மாணவர்களின் எண்ணிக்கை 4 மடங்கு குறைந்தும் சென்னையை சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை பல மடங்கு உயர்ந்தும்உள்ளது. இது தமிழ்நாட்டில் சென்னை மாணவர்கள் மட்டும் தான் திறமையானவர்களா; பிற மாணவர்கள் திறமையற்றவர்களா என்ற கேள்வியை எழுப்புகின்றது. ஆனால் அப்படி இல்லை..

‘தகுதி’ என்ற பதத்தைப் பற்றிய சரியான புரிதல் இல்லாததிலிருந்து விளைந்த குறுகிய பார்வை மற்றும் கருத்துகள் இவை. தகுதி என்பது ஒரு கருத்தாக்கம்; அதை மோசடி என்றுகூட கூறலாம். பல தளங்களில் ‘தகுதி’ என்பது போட்டித் தேர்வுகளில் ஒருவரது செயல்பாடு என்ற வெகுளித்தனமான கண்ணோட்டம் நிலவுகிறது. இந்த கண்ணோட்டம், சாதிய பாகுபாடுகள், பெற்றோரின் வெளிப்பாடு [EXPOSURE], படித்த பள்ளிகள், வாழும் சூழல் மற்றும் குழந்தைப் பருவ புறக்கணிப்பு மற்றும் முறைகேடு போன்ற இதர எதிர்மறை தாக்கங்கள் குறித்து மௌனமாக இருக்கிறது. கிராமத்தில், தலித்குடும்பத்தில் பிறந்த ஒரு குழந்தைக்கு, தில்லியில் மேல் நடுத்தர வர்க்கக்குடும்பத்தில் பிறந்த ஒரு குழந்தையை விட 10 மடங்கு குறைந்த வாய்ப்பும் வளங்களுமே இருக்கும். பின்னது தில்லியின் சிறந்த பள்ளிகளுள் ஒன்றில்சேர்ந்து, அதன் பெற்றோர் அதற்கான எதிர்காலப் பாதையை ஏற்கனவே தேர்ந்தெடுத்து முன்கூட்டியே தயாராகும் ஆதாயத்தைப் பெற்றுவிட, முன்னது பெரும்பாலும் சுமாரான அடிப் படை வசதிகள் கொண்ட பள்ளியில், பகுதி நேரம் பெற்றோருடன் வேலை பார்த்தபடியேசேர்ந்திருக்கும். இவ்வாறான நிலையில் தகுதியையோ திறமையையோ எவ்வாறு அளவீடு செய்ய முடியும்? இவ்விரு குழந்தைகளையும் ஒரே தேர்வை எழுத வைத்து, அதில் வாங்கும் மதிப்பெண்கள்அடிப்படையில் அவர்களது விண்ணப்பம் குறித்து முடிவு செய்வதென்பது பெரும் அநீதி அல்லவா? கோடிக்கணக்கான குழந்தை கள் மற்றும் பதின்பருவத்தினரின் எதிர்காலத்தை நீட் போன்ற - பயிற்சி பெறக்கூடிய, ஒரு ஒற்றைப் போட்டித்தேர்வுடன் இணைப்பது நியாயமற்றதாகும். இது, நிலவும் பிளவுகளை மேலும்விரிவுபடுத்தி, சமமின்மையை நிலைக்கச்செய்யும். தூய தகுதி எனும் கட்டுக்கதை அனைத்து தேர்வு அளவுகோல்களிலும் எதேனும் முரண்பாடு இருக்கும். கற்பனாவாதக் கருத்து. என்றாலும், கொள்கை இயற்றுபவர்கள் இதுபோன்ற முரண்பாடுகளையும் உள்ளார்த்த சார்புகளையும் முடிந்த அளவு குறைக்கும் வழிமுறைகளை ஏற்படுத்த வேண்டும். இதைத்தான், மருத்துவக் கல்விக்கான நுழைவுத்தேர்வுகளை அழித்து, தமிழ் நாட்டு மாணவர்களுக்கான ஒரு பொது, தளர்த்தப்பட்ட பாடத் திட்டமான சமச்சீர் கல்வியை அறிமுகப்படுத்தி, கலைஞரின் தலைமையிலான தி.மு.க. அரசு செய்தது. எளிய பாடத்திட்டம் ஆடுகளத்தினை ஓரளவு சமன்படுத்த உதவுகிறது என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. நீட் குறித்து சில ஆய்வுகளே மேற்கொள்ளப் பட்டிருந்தாலும், உலகமெங்கிலும், தகுதி எனும் கொள்கைக்கு நுழைவுத் தேர்வுகள் எதிரானவை என்பது குறித்து பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஏ.கே.ராஜன் குழுவறிக்கை யின்படி, 2010இல் ஆங்கில வழிக் கல்வி பயின்ற 80.2 விழுக்காடு மாணவர்களும், தமிழ்வழிக் கல்வி பயின்ற 19.79 விழுக்காடு மாணவர்களும் தமிழ் நாட்டிலுள்ள பல்வேறு மருத்துவக் கல்லூரிகளில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். ஆனால், நீட் அறிமுகப்படுத்திய பின், 2017இல் அனுமதி பெற்ற 98.41 விழுக்காடு பேர் ஆங்கிலவழி கல்வி பயின்றவர்கள். தமிழ் வழிக் கல்வி பயின்ற மாணவர்களில் 1.6 விழுக்காடு மட்டுமே கல்லூரி யில் இடம் பிடித்தனர். எடுத்துக்காட்டாக, நீட்டிற்கு முந்தைய மற்றும் பிந்தைய தரவுகள் இத்தேர்வு முதல் தலைமுறைப் பட்டதாரிகளுக்கு இல்லாமல் முதல் தலைமுறை யல்லாத பட்டதாரிகளுக்கு பெருமளவு சாதகமாக அமைந்துள்ளதைக் காண்பிக்கின்றனர்.

2010-2011இல், மருத்துவக் கல்லூரியில் இடம் பிடித்த முதல் தலைமுறை போட்டியாளர்களின் விழுக்காடு 24.61 விழுக்காடாக இருந்தது (முதல் தலைமுறையல்லாத போட்டியாளர்களின் விழுக்காடு 75 விழுக்காடாக இருந்தது). 2017ல், நீட்டிற்குப் பிறகு, இந்த விழுக்காடு வேகமாக சரிந்து, முதல் தலைமுறை மாணவர்கள் மருத்துவக் கல்லூரியில் இடம் பிடிப்பது 14.46 விழுக்காடாகி, மீதி பெரும் பாகமான 85.54 விழுக்காடு இடங்கள் முதல் தலைமுறை யல்லாத மாணவர்க ளுக்கு விடப்பட்டது. அதேபோல், நீட் தேர்வில் தேர்ச்சி பெறும் பெரும்பாலான மாணவர்கள் சிபிஎஸ்இ பின்புலத்திலிருந்து வருவதாகவே தெரிகிறது பெரும் பாலான சி.பி.எஸ்.இ. பள்ளிகள் அதிக கட்டணமுடையவையாக உள்ளன. அதே நேரம், சி.பி.எஸ்.இ. பள்ளிகளில் படிப்பதை நிர்பந்திப்பது, நமது குழந்தைகள், ஆளும் பா.ஜ.க. அரசு தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழு (NCERT) பாடத்திட்டத்தில் திணித்துவரும் பிரச்சாரத்தை, கற்றுக்கொள்ள வழி செய்யும்.

தி வாஷிங்டன் டைம்ஸ் மற்றும் புளூம்பெர்க் நடத்திய ஒரு ஆய்வு, பெரும்பணக்காரக் குடும்பத்திலிருந்து (உச்சி 1 விழுக்காடு) வரும் ஒருவர் ஐவி லீக் பள்ளியில் படிப்பதற்கான வாய்ப்பு, வறிய குடும்பத்திலிருந்து (கீழ் 20 விழுக்காடு) வரும் ஒருவரை விட 77 மடங்கு அதிகம் என்று காட்டுகிறது.

வசதி படைத்த பின்புலத்திலிருந்து வருபவர்களால், வருடத்திற்கு 1 இலட்சம் வரை கட்டணம் வசூலிக்கும் தனியார் சிறப்பு பயிற்சி பெற முடியும். 2005இல் நடந்த ஒரு ஐ.ஐ.டி. ஆய்வு, ஐஐடிக்கு தேர்ச்சி பெற்றதில் 95 விழுக்காடு மாணவர்கள் தனியார் பயிற்சி வகுப்புகளுக்குச் சென்றதாகவும், அதில் 75 விழுக்காடு நகர்ப்புற பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவித்தது. அதிர்ச்சியூட்டும் விதமாக, பத்தாண்டுகளுக்கு முன்பு வரை ஐ.ஐ.டி. சென்றவர்களில் ஆறில் ஒருவர் (1/6) கோட்டாவிலுள்ள பன்சால் வகுப்புகள் எனும் ஒரு பயிற்சி நிறுவனத்திலிருந்து வந்தவர்கள். இத்தகைய நிறுவனங்கள் சில, வருடத்திற்கு 1 இலட்சத்திலிருந்து 2 இலட்சம் வரை வசூலிக்கின்றன. இது பெரும்பான்மை இந்தியர்களால் செலுத்தவியலாத ஒரு தொகை. எனவே தான், ஐ.ஐ.டி.யில் அனுமதிக்கப்படுபவர்களில் வெறும் 2.86 விழுக்காடு மாணவர்களே நலிந்த/கிராமப்புற, படிக்காத குடும்பத்திலிருந்து வருப வர்கள். அகில இந்திய பொறியியல் நுழைவுத் தேர்வில் (AIEEE) வெற்றி பெற்றவரான ஆசிரியர், 2000ங்களின் நடுவில், நுழைவுத் தேர்வு அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் திருச்சி தேசிய தொழில்நுட்பக் கழகத்தில் சேர்ந்த மாணவர்களில் 70 விழுக்காடு சென்னையைச் சேர்ந்தவர்கள், அதிலும் குறிப்பான சில பள்ளிகளிலிருந்து வந்தவர்கள் என்று கூறுகிறார்.

தமிழ்நாட்டின் கிராமப்புறத்தில், மிகவும் வறிய தலித் குடும்பத்தில் பிறந்த அனிதா, சிறுவயதிலேயே தனது தாயை இழந்து விட்டார்; அவரது தந்தை ஒரு கூலித் தொழிலாளி. இத்துணை உள்ளார்ந்த சார்புகளை யும் மீறி, பள்ளித் தேர்வுகளில் 1200க்கு 1176 எடுத்து முதல் 0.3 சதவீதத்தில் தேர்ச்சி பெற அனிதாவினால் முடிந்தது. நீட் இல்லாது போயிருந்தால், அவரது பள்ளி மதிப்பெண்கள் கொண்டே, தமிழ்நாட்டின் தலை சிறந்த மருத்துவக் கல்லூரியொன்றில் படித்து, தனது சமூகத்தில் முதல் மருத்துவராக வந்திருப்பார். நீட் தேர்வில் தேர்ச்சி பெறாமல் அனிதாவை தடுத்தது அவரது திறனின்மையா அல்லது வாய்ப்புகள், வளங்கள் மற்றும் நேரப் பற்றாக்குறையா? கண்டிப்பாக அது நேர, வள மற்றும் வாய்ப்புகள் பற்றாக்குறையே. தனது கனவை நோக்கி முன்னேறும் வாய்ப்பை அவருக்கு அளித்திருந்தால், பயிற்சி நிலையத்தின் உதவி கொண்டு நீட் தேர்வில் முதல் மதிப்பெண் பெற்றவரை விட சிறப்பாக செயலாற்றும் நிலையில் அனிதா இருந்திருப்பார்.

**சேலம் தரணிதரன்**
**கழக தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செயலாளர்**



ஆனால், நீட் தேர்வு கொண்டு நாம் அனிதாவிற்கு மட்டுமல்லாது ஒரு முழு சமுதாயத்தின் இலட்சியத்திற்கே துரோகம் இழைத்திருக்கிறோம். நீட்தொடர்பான தற்கொலைகள், பதற்றம் காரணமானவையன்று; அவை இலட்சியம் மற்றும் நம்பிக்கை பறிக்கப்படுவதன் விளைவாக நிகழ்பவை. இதனாலேயே, பெரும்பாலான நீட் இறப்புகள் கிராமப்புற மற்றும் விளிம்புநிலை பின்புலம் கொண்டவர்களி டையே நிகழ்கின்றன. நீட் தேர்வின் தொடர்ச்சி தமிழ் நாட்டில் வழக்க மாக உருவாவதை விட நகர்ப்புறத்திலிருந்து அளவிற் கதிகமான மருத்துவர்களை உருவாக்கி, கிராமப் புறத்தில் மருத்துவர்களுக்கான பற்றாக்குறைக்கு இட்டுச் செல்லும், மேலும், நீட் ஆயிரக்கணக்கான கிராமப் புற, விளிம்புநிலை மாணவர்களின் கனவுகளையும் சிதைக்கும்.

தமிழ்நாடு இந்திய மாநிலங்களின் சுகாதார விளைவுகளின் தரவரிசையில், தொடர்ந்து முதல் 3 இடங்களில் இருந்து வருகிறது. தமிழ் நாடு, மக்கள் தொகைக்கு அதிகமான மருத்துவர்கள் இருக்கும் மாநிலமாக மட்டுமல்லாமல்,மருத்துவர்களின் சிறந்த இடஞ்சார்ந்த நியமனப் பகிர்வு [SPATIAL DISTRIBUTION] உடைய மாநிலமாகவும் உள்ளது. இவை நுழைவுத் தேர்வுகள் ரத்து செய்தல், சாதி அடிப்படை/இட ஒதுக்கீடு (கிராமப்புற/அரசுப் பள்ளி மாணவர்க ளுக்கான இட ஒதுக்கீடு) மற்றும் தமிழ்நாட்டில் பல இடங்களில் மருத்துவப் பல்கலைக்கழகங்கள் தொ டங்குவது போன்ற தலையீடுகளினால் சாதித்தவை. அதுவும், தமிழ்நாட்டின் தலைநகரமான சென்னை, இந்தியாவின் மருத்துவச்சுற்றுலா மையமாக விளங்குகிறது. இது போன்று சுகாதாரத் துறையில் பொறாமைப்படக் கூடிய அளவிற்கான முன்னேற்றத்தைக் கண்டுள்ள மாநிலம், ஒன்றிய அரசினால் அதன் வெற்றி கரமான முன்னேற்ற மாதிரியிலிருந்து விலகுமாறு நிர்ப்பந்திக்கப்படவேண்டும்?

மாறாக, தமிழ்நாடு இந்தியாவிற்கான முன்மாதிரி யாக ஆக்கப்பட்டு, ஒன்றிய அரசு தமிழ்நாடு மாதிரியை பிற மாநிலங்கள் பின்பற்றுமாறு பரிந்துரைக்க வேண்டும். ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடுகள் போன்ற பன்முகத் தன்மை கொண்டநாடு இந்தியா; மாநிலங்களுக்கிடையிலான முன்னேற்ற நிலைகளில்பெரும் வேறுபாடு உள்ளது. உதாரணமாக, தமிழ்நாட்டில், ஜார்க்கண்டை விட 32 மடங்கு மக்கள் தொகைக்கு அதிக மருத்துவர்கள் இருக்கிறார்கள். மாநிலங்களிடையே இத்தகைய வேறு பாடுகள் நிலவும்போது, ஒன்றிய அரசு இத்தகைய பன்முகத்தன்மைவாய்ந்த நாட்டிற்கு எவ்வாறு ஒரே சேர்க்கை

வழிமுறையை உருவாக்க முயற்சிக்க முடியும்? பொதுச் சுகாதாரம் மாநிலப் பட்டியலிலும், கல்வி ஒருங்கியல் பட்டியலிலும் இருக்கும் நிலையில், தமிழ் நாடு அரசு சட்டசபையில் இயற்றிய சட்டத்தினை குடியர சுத் தலைவர் பாராட்டி அதற்கு தனது ஒப்புதலையும் தருவதே நியாயம். தமிழ்நாட்டில் நீட் தேர்வு இனியும் தொடர்வது, நீதியைக் கேலிக்கூத்தாக்கி, கூட்டாட்சி முறையை அவமதிப்பதாகும்.